தினகரன் 18 MAR 2025

சில்லஹல்லா நீரேற்று புனல் மின் நிலையம்

# 1000 மெகாவாட் திட்டம் குறித்து பொது மக்கள் கருத்து கேட்பு ரத்து

ஊட்டி, மார்ச் 18: சில்லஹல்லா நீரேற்று புனல் மின் நிலையம் - நிலை 1 திட்டம் தொடர்பாக குந்தாவில் வரும் 20ம் தேதி நடைபெற இருந்த கருத்து கேட்பு கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே குந்தா நதியின் துணை நதியான சில்லஹல்லா ஆற்றின் குறுக்கே பிக்குளி பாலம் அருகே அணை கட்டி ரூ.7 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் ரூ.2 ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீர் மின் திட்டமானது செயல்படுத்தப்படும் என கடந்த 2013 ஆண்டு அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதனை தொடர்ந்து இத்திட்டத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் சில்லஹல்லா நீர் தேக்கம் அமைய உள்ள பகுதியில் மின்வாரிய அதிகாரிகள் உள்ளிட்டோர் ஆய்வுகள் மேற்கொண்டனர்.

இதனிடையே ஒரே கட்டமாக 2 ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீர்மின் திட்டத்தை நிறைவேற்றும் அளவிற்கு தொழில்நுட்பங்களோ, இயந்திர வடிவமைப்புகளோ இல்லாததால் இதனை நிறைவேற்றுவது சிரமம் என்பதால், இத்திட்டம் கைவிடப்படுவதாகவும், அதற்கு பதிலாக தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் இரு கட்டங்களாக செயல்படுத்தும் வகையில் மறு ஆய்வு செய்யப்பட உள்ளதாக கடந்த 2017ம் ஆண்டு மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் அறிவிக்கப்பட்டு ஆரம்ப நிலையிலேயே இருந்த இத்திட்டத்தை, துவக்க நடவடிக்கைகளெடுக்கப்பட்டு கடந்த 2020ம் ஆண்டு முதற்கட்ட பணிகள் துவக்கப்பட்டு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகளும் நடைபெற்றன. இதன்படி, தலா 1000 மெகாவாட் உற்பத்தி செய்யும் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டு கன்னேரி ஸ்ரீராம்நகர் அருகே பெம்பட்டி ஆடா மற்றும் குந்தா அருகே அன்னமலை கோயில் அடிவார பகுதியென இருஇடங்களில் அணைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இது நீர்மின் நிலையமாக மட்டுமின்றி, நீரேற்று குகை மின் நிலையமாக அமைக்கப்பட உள்ளது. 123.3 ஹெக்டர் வனத்துறை நிலம், 57 ஹெக்டர் அரசு நிலங்கள் மற்றும் 134.7 ஹெக்டர் என மொத்தம் 315 ஹெக்டர் நிலம் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.4200 கோடி நிதி செலவாகும் எனவும் கூறப்பட்டது. இந்நிலையில், சில்லஹல்லா நீரேற்று புனல் மின் நிலையம் - நிலை 1 (1000 மெகாவாட்) திட்டம் தொடர்பாக பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் வரும் 20ம் தேதி மஞ்சூர் அருகே குந்தா பகுதியில் உள்ள தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக கண்காணிப்பு பொறியாளர் அலுவலகத்தில் நடைபெறும் என தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தால் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்ற இடங்களில் வாழும் உண்மையான குடிமக்கள், சுற்றுச்சூழல் குழுக்கள் மற்றும் பிறர் உள்ளிட்ட அனைவரும் இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்கலாம், என தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே கடந்த 2020ம் ஆண்டு ஆரம்பகட்ட பணிகள் துவக்கப்பட்ட போதே, பாதுகாக்கப்பட்ட உயிர்சூழல் மண்டலமாக உள்ள நீலகிரியில் இத்திட்டத்தை செயல்படுத்த கூடாது என 15 கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இந்நிலையில் 20ம் தேதி குந்தாவில் நடைபெறும் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்று ஆட்சேபனைகளை தெரிவிக்க திட்டமிட்டிருந்தனர். இந்நிலையில் இக்கருத்து கேட்பு கூட்டம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தன்னீரு கூறுகையில், ''நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம், குந்தா கிராமத்தில் அமையவிருக்கும் சில்லஹல்லா நீரேற்று புனல்மின் திட்டம் நிலை - 1க்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன் படி, பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் வரும் 20ம் தேதி காலை 11மணியளவில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் நிர்வாக காரணங்களுக்காக அன்றைய தினம் கருத்து கேட்பு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது'' என தெரிவித்துள்ளார்.